ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අති විශෙෂ   அதிவிசேஷமானது

අංක 2112/6 - 2019 පෙබරවාරි මස 25 වැනි සඳුදා - 2019.02.25

**2112/6 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 25 ஆந் திகதி திங்கட்கிழமை**

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி III - காணிகள்

## காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

### காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)

*39 அ (1) ஆம் பிரிவின் கீழான கட்டளை இரத்துச் செய்தல்*

எனது இல. : 4-3/11/2016/யூஎஎ/440.
பிரதேச செயலாளரின் இல. : 6/3/1/516.

காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 38 ஆம் பிரிவின் காப்பு வாசகம் (அ) வின் கீழ் விதிக்கப்பட்டதுமான 2017.09.11 ஆந் திகதி 2036/3 ஆம் இலக்க அரசாங்க அதி விசேட அறிவித்தலில் பிரசுரிக்கப் பட்டதுமான, 2017 ஆம் ஆண்டின் 216 ஆம் இலக்க மற்றும் 2017.08.28 ஆந் திகதிய கட்டளையில் விபரமாக காட்டப்பட்டுள்ள காணித் துண்டுகள் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசிடம் அரசுக்குரித்தாக்கப் பட்டுள்ளன எனினும் அரசின் சார்பில் அச்சட்டத்தின் 40 ஆம் பிரிவின் (அ) பந்தியின் கீழ் இக்காணித் துண்டுகளின் உடைமை இன்னும் பொறுப்பேற்கப்படவில்லை. ஆகையால், அச்சட்டத்தின் 39 (அ) ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவினால் எனக்களிக்கப்பட்ட தத்துவங்களின் பிரகாரம் காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் கயந்த கருணாதிலக்க ஆகிய நான், 2017.09.11 ஆந் திகதிய 2036/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட மேற்குறிப்பிடப்பட்ட 2017 ஆம் ஆண்டின் 216 ஆம் இலக்க மற்றும் 2017.08.28 ஆந் திகதிய கீழ்வரும் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணித் துண்டுகளை இக் கட்டளை மூலம் உரித்து நீக்குகின்றேன்.

கயந்த கருணாதிலக்க,
காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர்.

காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சு,
"மிஹிகத மெதுர", காணிச் செயலகம்,
இல. 1200/6, ரஜமல்வத்தை வீதி,
பத்தரமுல்லை,
2019.02.12

### அட்டவணை

மேல் மாகாணத்தில், களுத்துறை மாவட்டத்தில், ஹொரண பிரதேச செயலகப் பிரிவில், கிந்தெல்பிட்டி கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் 2017.05.09 ஆந் திகதி தயாரிக்கப்பட்ட ஆரம்ப முதற்சுவட்டு வரைபடத்தில் கேஎ/எச்ஆர்என்/17/149 இல் குறிப்பிடப்பட்ட காணித்துண்டுகளின் எல்லைகள் :

01. **துண்டு - குறிப்பிடப்படவில்லை - விஸ்தீரணம் : சுமார் 0.0043 ஹெக்டயார்**

வடக்கு : நாகந்தல வீதி மற்றும் கொட்டகல பெருந்தோட்டக் கம்பனி உரிமை கோரும் தெருகல (பகுதி சீ); கிழக்கு : துண்டு சீ ; தெற்கு : துண்டு ஈ ; மேற்கு : துண்டு ஏ மற்றும் கொட்டகல பெருந்தோட்டக் கம்பனி உரிமை கோரும் தெருகல (பகுதி சீ).

01. **துண்டு 'ஈ' - மீகஹஹேன வத்தை - விஸ்தீரணம் : சுமார் 7.0587 ஹெக்டயார்**

வடக்கு : மாபிலியா கந்த வீதி, துண்டு ஏ, பீ (வீதி), சீ மற்றும் டீ; கிழக்கு : துண்டு சீ, டீ மற்றும் நாகந்தல வீதி ; தெற்கு : நாகந்தல வீதி, பிரேமவதி வீரக்கொடி மற்றும் பிரதிப் ஹேமசந்திர உரிமை கோரும் எக்கர ஹெத்ததெக காணி, டேவிட் அமரதுங்க உரிமை கோரும் ஏக்கர ஹெத்ததெக காணி, காமிணீ வணிங்கதுங்க உரிமை கோரும் ஏக்கர ஹேத்ததெக காணி, டபிள்யூ. சிட்டி நோனா உரிமை கோரும் ஏக்கர ஹெத்ததெக காணி, எச். ஏ. விஜேரத்ன மற்றும் இன்னும் சிலர் உரிமை கோரும் எக்கர ஹெத்ததெக காணி மற்றும் எச். எசிலின் நோனா மற்றும் ஜி. புஷ்பகுமார உரிமை கோரும் மாபிலியா கந்த ; மேற்கு : நாகந்தல வீதி, பிரேமவதி வீரக்கொடி மற்றும் பிரதிப் ஹேமசந்திர உரிமை கோரும் ஏக்கர ஹேத்ததெக காணி, டேவிட் அமரதுங்க உரிமை கோரும் ஏக்கர ஹெத்ததெக காணி, காமிணீ வணிங்கதுங்க உரிமை கோரும் ஏக்கர ஹேத்ததெக காணி, டபிள்யூ. சிட்டிநோனா உரிமை கோரும் ஏக்கர ஹெத்ததெக காணி, எச். ஏ. விஜேரத்ன மற்றும் இன்னும் சிலர் உரிமை கோரும் எக்கர ஹெத்ததெக காணி மற்றும் எச். எசிலின் நோனா மற்றும் ஜி. புஷ்பகுமார உரிமை கோரும் மாபிலியா கந்த மற்றும் பாபிலியா கந்த வீதி.

03-504


1A – G 29531– 26 (2019/02)

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் அச்சிடப்பட்டது.

இவ் அதிவிஷேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.